**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**

IN THE COURT OF : Sessions Court for trial of
Communal Clash Cases in Southern Districts
Madurai.

Calender : **CC. No. 2/2010**

Miscellaneous :

Preliminary Register :

Sessions :

Deposition of witness for **Prosecution** அ.சா. **22**
**Defence**
**Court**

**Name** **:** செல்வ என்ற வெங்கட்ராமன்

Father's/Husband Name :

Village :

Taluk :

Caste :

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873

on the day of 24.03.2022

**முதல் விசாரணை**:

நான் தற்போது தென்காசியில் சக்திநகர் என்ற இடத்தில் குடியிருந்து வருகிறேன். 2006-2007 ம் ஆண்டு நான் விவாசயம் செய்து வந்தேன். தென்காசி, எல்.ஆர்.எஸ் பாளையம், கன்னிமாரம்மன் கோவில் தெருவை தெரியும். அந்த பகுதியில் இரண்டு அல்லது மூன்று நபர்கள் கேபிள் இணைப்பு கொடுத்துள்ளார்கள். எனக்கு விவசாயம் தவிர வேறு தொழில்கள் இல்லை. இறந்து போன குமார்பாண்டியன் அவரது சகோதரர்களை தெரியாது. ஆஜர் எதிரிகளை தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**இந்நிலையில், இந்த சாட்சியினை பிறழ்சாட்சியாக விசாரிக்க அரசு**

**தரப்பில் அனுமதிகோரப்பட்டு, அதன்பேரில் அனுமதி வழங்கப்பட்டது**:-

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

என்னை போலீசார் விசாரித்தார்கள் என்றும், அவ்வாறு என்னை போலீசார் விசாரித்த போது நான் போலீசார் விசாரனையில் நான் 2006-2007 ம் ஆண்டு தென்காசி கன்னிமாரம்மன் கோவில் தெரு, மங்கம்மாள் சாலையில் ஒரு பகுதியில் கேபிள் டி.வி இணைப்பு கொடுத்துள்ளேன் என்றும், அடிக்கடி நான் இணைப்புகொடுக்க கேபிள் இணைப்புகளை பழுது ஏற்பட்டதால் இரவு நேரங்களில் கேபிள் இணைப்புகளை சரிபார்த்துகொண்டு மங்கம்மாள் சாலை வழியாக குறுக்காக அரசு மருத்துவமனை பகுதி வழியாகவோ அல்லது ஹவுசிங்க போர்டு வழியாக சக்தி நகருக்கு செல்வது வழக்கம் என்று அவ்வாறு வழக்கம் போல இணைப்புகளை சரிபார்த்துவிட்டு 4-8-2007 அன்று சனிக்கிழமை இரவு சுமார் 10.30 மணியளவில் எனது நண்பர் ராஜ்குமார் என்பவரிடம் இணைப்புகளை சரிபார்த்துவிட்டு அரசு மருத்துவமனை செல்லும் தனிவழியில் சென்று கொண்டிருந்த போது அரசு மருத்துவமனையின் கிழக்கு கடைசி வாசலில் மேற்கிலிருந்து கிழக்காக அப்துல்லா, அலாவூதின் ஹனிபா ஆகிய மூவரும் வந்து கொண்டிருந்தனர் என்றும், போலீசார் விசாரணையில் கூறியிருக்கிறேன் என்றால், சரியல்ல. அவர்களை தனியிடத்தில் பார்த்தால் பயந்து போய் அரசு மருத்துவமனையின் கிழக்கு கடைசி கேட்டிற்கு சற்று தள்ளி மோட்டார் சைக்கிளை அனைத்து விட்டு இருளில் மறைந்து கொண்டோம் என்றும், மேற்படி மூவரும் இரண்டு மோட்டார் சைக்கிள் நின்றுகொண்டிருந்த இடத்தில் பேசிக்கொண்டிருந்தனர் என்றும், அவர்கள் குமார்பாண்டியனை தீர்த்துவிட்டோம் ஆனால் அவரது தம்பி செந்தில், சுரேந்திரன், தற்போது தலையெடுத்து வருவதால் அவர்களையும் முடித்துவிட வேண்டும் என்றும், சக்திபாண்டியன் தற்போதைய தலைவர் என்றும் அவரையும் விடக்கூடாது என்றும், மூவரும் கையெழுத்து போட காரில் வீட்டிலிருந்து கிளம்பி ஒன்றாக சென்று வருவார்கள் என்றும், அவர்கள் போகும் போதும் வரும் போதும் மேலமுத்தராம்மன் கோவிலும், பிள்ளையார் கோவிலும் நின்று சாமி

கும்பிட்டு போவார்கள் என்றும், நாம் அவர்களை தாக்குவதற்கு செவ்வாய்கிழமை சரியான நாள் என்றும் பேசிக்கொண்டிருந்தார்கள் என்றும் போலீசார் விசாரணையில் கூறியிருக்கிறேன் என்றால், சரியல்ல என்றும், மேலும் அவர்கள் முத்தராம்மன் கோவில் இடத்தை நிர்ணயித்தால் அங்கே குறுகிய ரோடு என்றும், முன்னும் பின்னும் மறித்து கொண்டால் தப்பிக்க முடியாது என்று ஹனிபா கூறினார் என்றும், இனிமேல் அது தொடர்பான பிரச்சனையை பேச வேண்டும் என்றால் இங்கே வந்து பேசிக்கொள்ளலாம் என்றும் மற்ற விசயங்களை வீட்டில் வைத்து பேசிக்கொள்ளலா் என்று கூறி இருசக்கர வாகனத்தில் கிளம்பி விட்டார்கள் என்றும், இதை மறுநாள் சக்தி, மற்றும் செந்தில் என்பவரிடம் ராஜ்குமார் கூறி எச்சரித்தார் என்றும் ஆனால் எச்சரிக்கை பலனளிக்கவில்லை என்று போலீசார் விசாரணையில் கூறியிருக்கிறேன் என்றால், சரியல்ல. நான் தற்போதும் தென்காசியில் குடியிருக்கிறேன். விவசாய கூலி வேலை செய்து வருகிறேன். தென்காசி, வல்லம், கருத்தப்புளியூர் பகுதிகளில், விவசாய கூலி வேலை செய்கிறேன். இஸ்லாமியர்கள் வல்லம் பகுதியில் அதிகம் குடியிருந்து வருகிறார் என்றால், சரிதான், விவசாய நிலங்கள் வைத்துள்ளார்கள் என்றால், சரிதான். நான் குடியிருக்கும் சக்தி நகர் பகுதியில் கேபிள் இணைப்பு உண்டு, அந்த பகுதியில் ராஜா என்பவர் கேபிள் இணைப்பு வழங்கி வருகிறார். எனக்கு கேபிள் இணைப்பு வழங்குவது அந்த வழித்தடத்தை சரிபார்ப்பது போன்ற தொழில்நுட்ப வேலைகள் தெரியும் என்றால், சரியல்ல. நான் கேபிள் தொழில் செய்து வந்தேன் என்றும், எனக்கு எதிரிகள் குடியிருக்கும் பகுதியில் அதிக வாடிக்கையாளர்கள் இருக்கிறார்கள் என்றும், நான் தொழில் செய்வதற்கு எதிரிகள் தயவு தேவை என்பதால் அவர்களை பகைத்துக் கொள்ளக்கூடாது என்று பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல. நான் மேல முத்தராம்மன் கோவில் சென்று அடிக்கடி சாமி கும்பிட்டு வருவேன். பிரச்சனைக்குரிய மசூதி எங்கே இருக்கிறது என்று எனக்கு தெரியாது. 2006-2009 ம் ஆண்டு வரை எனது சொத்துக்கள் எதையும் நான் விற்கவில்லை. (மேற்கண்ட கேள்வி வழக்கின் பிரச்சனைக்கு தொடர்பற்றது என்று எதிரிகள்

தரப்பி ஆட்சேபிக்கப்பட்டது). சக்திநகருக்கு நான் மங்கம்மாள் சாலை வழியாகவும் செல்வேன். 2007 ம் ஆண்டு சேகர், செந்தில், சுரேஷ் இறந்து போனார்கள் என்றால், அது பற்றி எனக்கு தெரியாது. 2006, 2007 ம் ஆண்டிலும், எங்கள் வீட்டில் ராஜா என்பவர் தான் கேபிள் இணைப்பு கொடுத்துள்ளார். எதிரிகளுக்கு பயந்து நான் பொய் சாட்சி சொல்கிறேன் என்றால், சரியல்ல.

**எதிரிகள்தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை**